வகுப்பு: 7
பாடம்:அறிவியல்
பாடத் தலைப்பு :அன்றாட வாழ்வில் வேதியியல்
பள்ளி: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி காம்பட்டு
ஒன்றியம்: திருநாவலூர்
மாவட்டம்:கள்ளக்குறிச்சி

[I]சரியான விடையைத் தேர்ந்தெடு

1.நம் வாழ்வில் தினமும் பயன்படுத்தும் ஒரு வேதியல் பொருள்.

அ. பற்பசை ஆ.பினாப்தலின் இ.மெத்தில் ஆரஞ்சு இ.ஆக்ஸாலிக் அமிலம்

2.வாந்தி அல்லது வயிற்றுப் போக்கின் மூலம் ஏற்பட்ட நீர் பற்றாக்குறையை மீட்டெடுத்து நீரை சமநிலைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிமுறை?

அ.உப்பு நீர்க் கரைசலை உட்கொள்ளல் ஆ.தடுப்பூசி போடுதல்.

இ.ஆன்டாசிட் மாத்திரை. ஈ.வாய்வழி நீரேற்ற கரைசல் உட்கொள்ளுதல்

3. நமது இரைப்பையில் சுரக்கும் அமிலம்?

அ. கந்தக அமிலம் ஆ. குளோரிக் அமிலம்

இ.ஹைட்ரோ குளோரிக் அமிலம் ஈ.சிட்ரிக் அமிலம்

4. கீழ்கண்டவற்றுள் ஒரு காரத்தை தேர்ந்தெடு!

அ. சுண்ணாம்பு ஆ.மஞ்சள் இ.மெத்தில் ஆரஞ்சு ஈ.பினாப்தலின்

5. எரியும் சுடரின் உட்புற பகுதி எந்த வண்ணத்தில் இருக்கும்?

அ.நீலம் ஆ.மஞ்சள் இ.வெளிர்மஞ்சள். ஈ.கருமை

LIVEWORKSHEETS